நகர்மன்றம்,<br>உதகமண்டலம்,<br>31.10.2022.

அன்புடையீர்,

வணக்கம், இந்நகர்மன்ற அக்டோபர் 2022ம் மாத அவசரக் கூட்டம் வருகின்ற 31.10.2022, திங்கட்கிழமை அன்று காலை 12.00 மணியளவில் நகரமன்ற தலைவர் திருமதி.எம்.வாணீஸ்வரி அவர்களின் தலைமையில் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறுவதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்பட கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப்பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**<u>முன்னிலை : திருமதி.எம்.வாணீஸ்வரி, நகர மன்ற தலைவர்</u>**

1. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.32ல் உள்ள மேல்காந்தி நகர் பகுதியில் உள்ள மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது மற்றும் மழைக்காலங்களில் மழைநீர் அருகில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து விடுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் மழைநீர் கால்வாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,00,000க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

2. நகராட்சி எல்லைக்குட்பட்ட 10வது வார்டில் உள்ள மேல்போகி தெரு மற்றும் சிலேட்டர் ஹவுஸ் பகுதியில் உள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் மேன்ஹோல்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் கழிவுநீர் அனைத்தும் சாலையின் மேற்புறத்தில் செல்கிறது மற்றும் அருகில் உள்ள வீடுகளுக்கும் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது மற்றும் பள்ளி குழந்தைகள் செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன்கருதி அப்பகுதியில் உள்ள பழுதடைந்த மேன்ஹோல்கள் மற்றும் குழாய்கள் மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8,00,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

3. நகராட்சி எல்லைக்குட்பட்ட சம்மர் ஹவுஸ் காலணி மற்றும் ஸ்டேட் பாங்க் காலணி செல்லும் பகுதியில் உள்ள குடிநீர் குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளது. அப்பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலுவதில்லை. மற்றும் அப்பகுதியில் உள்ள வீட்டு இணைப்புகள் அனைத்தும் சாலையின் குறுக்கே செல்வதாலும் வாகனங்கள் செல்வதற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் புதியதாக பிரதான குழாய்கள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2,75,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.,**

4. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12ல் உள்ள காந்தல் புதுநகர் காலணி பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் கட்டிடத்தின் தரைதளம்

மற்றும் இருக்கையின், கதவுகள் மற்றும் குடிநீர் குழாய்கள் அனைத்தும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் உபயோகிக்க இயலாமல் உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அக்கழிப்பிடத்திற்கு பராமரிப்பு பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7,00,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

5. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26ல் உள்ள கஸ்தூரிபாய் காலணி பகுதியில் உள்ள சமுதாயகூடம் மிகவும் பழுதடைந்து உள்ளதாலும், அக்கட்டிடத்தின் கதவுகள், ஜன்னல்கள் மற்றும் தரைதளம் ஆகியவை பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் உபயோகிக்க இயலாமல் உள்ளது மற்றும் அப்பகுதியில் உள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். எனவே பொதுமக்கள் நலன்கருதி அச்சமுதாய கூடத்திற்கு பராமரிப்பு பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

6. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9ல் உள்ள பெரியார் காலணி மற்றும் அண்ணா காலணி பகுதியில் உள்ள குடிநீர் குழாய்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலுவதில்லை. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் பழுதடைந்த குழாய்களை மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

7. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.7ல் உள்ள விவேகானந்தா நகர் பகுதியில் உள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் மேன்ஹோல்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது. கழிவுநீர் அனைத்தும் சாலையின் மேற்புறத்தில் செல்வதாலும் மற்றும் அருகில் உள்ள வீடுகளுக்கு சுகாதார சீர்கேடு விளைவிக்கிறது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் புதியதாக பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் மேன்ஹோல்கள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7,00,000/–க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

**அனுமதி வழங்கலாம்.**

8. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.36ல் உள்ள பாதாள சாக்கடை குழாய்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் பொதுமக்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படுகிறது. மற்றும் அந்நடைபாதையில் அருகில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து விடுகிறது. மேலும் அப்பகுதி மக்களுக்கு சுகாதார கேடு விளைவிக்க வாய்ப்புள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி அப்பகுதியில் புதியதாக பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் மேன்ஹோல்கள் அமைக்க

தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7,50,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணி அவசிய பணியாக உள்ளதால் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

**அனுமதி வழங்கலாம்.**

(ஒம்) திருமதி.எம்.வாணீஸ்வரி,
நகர மன்ற தலைவர்,
உதகமண்டலம் நகராட்சி.

/உ.ந.உ.ப/

ஆணையாளர்,
உதகமண்டலம் நகராட்சி.